## எழுத்தறிவுப் போட்டிகளின் விதிமுறைகளும் விளக்கங்களும் (இணைப்பு: 6)

1. கீழ்ப்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (6-7 வயது): இது ஒரு மணி நேரப் பரீட்சை ஆகும்.
2. மத்தியபிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (8-9 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
3. மத்தியபிரிவிற்கான அடிப்படை எழுத்தறிவுப் போட்டி (8-9 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
4. மேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (10-11 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
5. மேற்பிரிவிற்கான அடிப்படை எழுத்தறிவுப் போட்டி (10-11 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும்.
6. அதிமேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (12-14 வயது): இது 2 மணி நேரப் பரீட்சை ஆகும்.
7. அதிமேற்பிரிவிற்கான அடிப்படை எழுத்தறிவுப் போட்டி (12-14 வயது): இது 2 மணி நேரப் பரீட்சை ஆகும்.
8. இளைஞர் பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி (15-17 வயது): இது 2 மணி நேரப் பரீட்சை ஆகும்.
9. இளைஞர் பிரிவிற்கான பரீட்சைத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.
   - கேட்டபின்பு பதிலளிப்பதற்குக் (**Listening and Responding**) கேட்கப்படும் வினாக்கள், நீங்கள் கேட்ட பகுதியிலிருந்து கேட்கப்படும்.
   - வாசிப்பதற்கும் பதிலளிப்பதற்கும்(**Reading and Responding**) கேட்கப்படும் வினாக்கள்,உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாசிப்புப் பகுதியிலிருந்து கேட்கப்படும்.
   - எழுதுவதற்குக் (**writing**) - கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 200 சொற்களிற்குக் குறையாமலும் 250 சொற்களுக்குக் கூடாமலும் ஒரு கட்டுரை எழுதும்படி கேட்கப்படுவீர்கள். இதிலே தலைப்பின் பொருள் விளக்கம், கட்டுரை அமைப்பு, இலக்கண சுத்தி என்பன கவனிக்கப்படும்.
10. எழுத்தறிவுப் போட்டிகள் நியூசவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகளின் பாடத்திட்டத்தைத் தழுவியதாக அமையும். அவுஸ்திரேலிய மொழிக்கல்வி தொடர்பான அணுகுமுறையும், விடயதானமும், அடைவுகளும் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். அடிப்படை எழுத்தறிவுப் போட்டி தமிழிற் பின்தங்கிய மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் நடாத்தப்படுகின்றது.
11. எழுத்தறிவுப் போட்டிகள் மாநில, தேசிய மட்டங்களில் நடாத்தப்படுகின்றன. எனவே மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாணவர்களிடையே முதற் பரிசு பெறும் போட்டியாளருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம். அடிப்படை எழுத்தறிவுப் போட்டி மாநில மட்டத்தில் மட்டுமே நடைபெறும்.

12. "விசேட எழுத்தறிவுப் போட்டி - இளைஞர் பிரிவு" ஒரு பயிற்சி பரீட்சையாக நடாத்தப்படுவதுடன் பரீட்சை முடிவுகள் தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்கு மட்டும் தெரியப்படுத்தப்படும். இப்போட்டிக்கு தேசிய/மாநில நிலையோ பதங்கங்களோ வழங்கப்படாது.
13. ஒவ்வொரு பிரிவிற்கும் தரப்படும் புதிய கேள்விகளோடு கடந்த வருடப் பரீட்சைகளிற் கொடுக்கப்பட்ட சில வினாக்களும் இடம்பெறலாம்.
14. கடந்த ஆண்டு (2006 - 2024) எழுத்தறிவுப் போட்டிகளுக்கான வினாத்தாள்கள் எமது இணையத்தளத்திலிருந்து (**www.tamilcompetition.org.au**) பெறலாம்.
15. அடிப்படை எழுத்தறிவுப் போட்டிகளுக்கான மாதிரி வினாத்தாள்கள் எமது இணையத்தளத்திலிருந்து (**www.tamilcompetition.org.au**) பெறலாம்.
16. எழுத்தறிவுப் போட்டியாளர்கள் போட்டி முடிவடைந்த பின்னரே மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவர்.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**